திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்படி தங்கும் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா.

திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகப் பிரசித்தி பெற்றதும், ஆயிரம் ஆண்டுகள் பழமையானதுமான தஞ்சை பெரிய கோயில் உள்ளது. அதனைத் தரிசிக்க வருகிற பக்தர்களுக்கு, பார்க்க வருகிற பயணிகளுக்கு இதுவரையிலும் தங்கும் விடுதி வசதி அங்கே இல்லை. தொல்பொருள் துறை பாதுகாப்பில் இல்லாத அரசு இடத்தில் அத்தகைய தங்கும் விடுதியைக் கட்டிட அரசு முன் வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் மூலமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழக அரசு தலையிடுவதற்குத் தடைகள் இருக்கின்ற காரணத்தினால் . . .

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென தனியாக விடுதி கட்ட வேண்டிய அவசியம் இல்லை. உலகத் தமிழ் மாநாடு 1995 ஆம் ஆண்டு அங்கே நடைபெற்றபோது ஏராளமான ஓட்டல்கள் புதிதாக அங்கே கட்டப்பட்டன. ஆகவே, பலவிதமான தங்கும் விடுதிகள் தஞ்சாவூரில் ஏற்கெனவே உள்ளதால், புதிதாக விடுதி கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

28—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

*** 37446—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2005 செப்டம்பர் 23]

(அ) ஏற்காடு தொகுதி, வெள்ளிக்கவுண்டனூர் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் உள்ள வெள்ளிக்கவுண்டனூரில் இயங்கி வரும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளி, 25–5–2005 ஆம் நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 79–ன்படி உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கா.தி. இளையகண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி வெள்ளிக்கவுண்டனூர் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற பல ஆண்டுகாலமான கோரிக்கையை ஏற்று நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்கத் தாரகை, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சியிலே நிறைவேற்றிக் கொடுத்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 29, திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

29—

இலவசப் பட்டா

*** 41425—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சி பேரூராட்சியிலுள்ள மாச்சம்பாளையம், ஈச்சனாரி, குனியமுத்தூர் பேரூராட்சியிலுள்ள இடையர்பாளையம்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS